பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 25 வியாழக்கிழமை 11.08.2022 கதிர் 167

## மின் கட்டண உயர்வு; ஓகஸ்ட் 29 விவாதம்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்துக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஓகஸ்ட் 30, 31 மற்றும் செப்டெம்பர் 1, 2 ஆகிய திகதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை விவாதம்

2

▸ ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ▸ சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ▸ ஐ.நா. தீர்மானம்

# ரணிலிடம் 3 முக்கிய விடயங்களை முன்வைத்த ஐரோப்பிய ஒன்றியம்

## – ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது



மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐரோப்பிய ஒன்றியம் நேரில் வலியுறுத்தியுள்ளது.

2

## 90 நாள்கள் தாய்லாந்தில் தங்கிவிட்டு இலங்கைக்குத் திரும்புவார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது 90 நாள் தாய்லாந்து விசா முடிவடைந்தவுடன் நவம்பர் மாதம் இலங்கை திரும்புவார் என்று தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேறு நாட்டில் தற்காலிக தங்குமிடம் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லாததால் அவர் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தான் இன்னமும் சிங்கப்பூரிலேயே தங்கியிருக்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று காலை தெரிவித்துள்ளார்.

2



## பேராயருக்குக் கொரோனா

### வைத்தியசாலையில் சேர்ப்பு



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பேராயரின் உடல் நிலை சீராக இருக்கின்றது

2

## மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இன்று கைது!

தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிஹால் வேதாராச்சி பொலிஸாரால் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

## இரு ஆஸ்திரேலிய வீரர்கள் இலங்கைக்கு நன்கொடை



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் இருவர், இலங்கையில் உள்ள சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்காக 45 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களை நிதி உதவியாக வழங்கியுள்ளனர்.

2

## அநுரவின் முடிவு கவலைக்குரியது


### கடிதம் அனுப்பினார் ரணில்



சர்வகட்சி அரசை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றுவதில்லை என்ற ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் தீர்மானம்

2

## 'நியூ டயமன்ட்' தீ விபத்து; 2 வருடங்களின் பின்னர் வழக்கு



இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் எரிபொருளைக் கொண்டு சென்றபோது தீப்பற்றலுக்கு உள்ளான நியூ டயமன்ட் கப்பலால் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் வழக்குத் தொடர கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இரண்டு வருடங்களின் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான நட்டஈட்டை வழங்க காப்புறுதி

2

## ஜனாதிபதி அரியணையில் அமர்ந்த 2 பெண்கள் கைது!

கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவைப் பகுதியில் வசித்து வரும் 49 மற்றும் 55 வயதுடைய இரு பெண்களே இவ்வாறு கைதாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

## கொக்குவிலில் பெற்றோல் பெற காத்திருந்த குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் பெறக் காத்திருந்த குடும்பஸ்தர் திடீரென மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த சிவசோதிலிங்கம் சொரூபன் (வயது 38)

2



## இலங்கையை விட்டு வெளியேறுமாறு பிரிட்டன் பெண்ணுக்கு அறிவுறுத்தல்



சமூக ஊடகங்களில் அரசுக்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டத்தைப் பதிவேற்றிய பிரிட்டன் பெண்ணான கெய்லி பிரேசருக்கு விசா வழங்குவதை நிறுத்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

எனவே, அவர் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறுமாறு இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. முன்னதாக, கெய்லி பிரேசர் விசா நிபந்தனைகளை மீறியதால் அவரது கடவுச்சீட்டை இலங்கையின் குடிவரவு மற்றும்

2

## ஐ.நா. கூட்டத் தொடர்; அறிக்கை தயாரிப்பு



ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை

2

## இலங்கையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியகல்வுத் திணைக்களம் பறித்திருந்தது.

விசாரணைக்காக 7 நாள்களுக்குள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் விளக்கமளிக்குமாறு கெய்லி பிரேசருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது அவர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் இருந்து வெளியேறவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளார்.

## பேராயருக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என வைத்தியசாலை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பேராயர் பங்குபற்றவிருந்த அனைத்து உற்சவ நிகழ்வுகளும்ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## 90 நாள்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், தான் தாய்லாந்துக்குச் செல்ல எதிர்பார்த்திருக்கின்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை பிரத்தியேகமாகத் தொடர்பு கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கோட்டாபய, வேறு நாட்டில் நிரந்தர புகலிடம் தேடுவதற்காகத் தாய்லாந்தில் தற்காலிகமாகத் தங்கியிருப்பார் என்று தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்-ஓ-சா நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினை. இது தற்காலிக தங்குமிடம் என்று நாங்கள் உறுதியளித்துள்ளோம். எந்த அரசியல் நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படாது. மேலும் இது அவருக்குத் தஞ்சம் புகுவதற்கு ஒரு நாட்டைக் கண்டறிய உதவும் என்றும் தாய்லாந்து பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் இருந்து இன்று தாய்லாந்து செல்லவுள்ளார் என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இன்னும் இராஜதந்திரக் கடவுச்சீட்டு வைத்திருப்பதால் தாய்லாந்தில் 90 நாட்கள் தங்கியிருக்கலாம் என்று தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் டொன் பிரமுத்வினாய் கூறியிருந்தார்.

இந்த விஜயத்தை இலங்கை அரசு எதிர்க்கவில்லை எனவும், தாய்லாந்து அரசு அவருக்குத் தங்கும் வசதிகளைச் செய்துகொடுக்காது எனவும் தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

தாய்லாந்துக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடாது என்பதே கோட்டாபய தங்குவதற்கான ஒரு நிபந்தனை என்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## ரணிலிடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் தொடர்பான விடயங்கள் அவற்றில் உள்ளன என்று நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அரசு விசேட கவனம் செலுத்தி நிலையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது எனக் கொழும்பிலுள்ள ஐரோப்பியஒன்றியஅலுவலகம்வெளியிட்டுள்ள 'டுவிட்டர்' பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துப்படி, சிவில் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு, பேச்சு சுதந்திரம்மற்றும்எதிர்ப்பைவெளிப்படுத்துவது என்பவை தொடர்பிலும் பிரதிநிதிகள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

## அநுரவின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலைக்குரியது என்று ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சர்வகட்சி அரசு தொடர்பாக ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு ஜே.வி.பிக்கு நேற்றுமுன்தினம் நேரம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த கலந்துரையாடலில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், சர்வகட்சி அரசில் எந்தவகையிலும் இணைந்துகொள்ளப்போவதில்லை என்றும் ஜே.வி.பி. ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி தரப்பில் இருந்து அநுரகுமார திஸாநாயக்கவுக்குப் பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில், கலந்துரையாடலில் கலந்துகொள்வதில்லை என்ற ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவின் தீர்மானம் குறித்து கவலையடைகின்றேன் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வகட்சி அரசு தொடர்பில் ஜே.வி.பி. தனது ஒத்துழைப்பை வழங்கும் என்று தான் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இரு ஆஸ்திரேலிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக ஆஸ்திரேலிய அணி வீரர்களான ஆரோன் பின்ச் மற்றும் பெட் கம்மின்ஸ் ஆகியோர் இந்தத் தொகையை வழங்கியுள்ளனர்.

இந்தத் தொகையை இலங்கையின் சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு யுனிசெவ் மூலம் பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையில் 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு இருபது போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஆஸ்திரேலி அணி இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டமைக்கு இலங்கை ரசிகர்கள் நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொக்குவிலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது மோட்டார் சைக்கிளுக்கான பெற்றோலைப் பெற்றுக் கொள்ள தனது கியூ.ஆர். குறியீட்டை காண்பித்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் மயங்கி சரிந்து விழுந்துள்ளார்.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை வைத்தியசாலையில் சேர்த்த போதும் அவர் உயிரிழந்துள்ளார். ஆரம்பகட்ட வைத்திய பரிசோதனைகளின் அடிப்படையில் உயிரிழப்புக்கு மாரடைப்பே காரணம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

## மின் கட்டண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு முடிவு செய்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான விவாதத்தை நடத்துவதற்கு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. கூட்டத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொள்வதற்காக இலங்கையால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் பங்குபற்றலுடன் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றுக்குரிய நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு எதிர்காலத்தில் இந்த நிறுவனங்கள் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து பொறிமுறையொன்றைத் தயாரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய் ராஜரத்தினம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.ஆர்.கே.லேனகல, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களான பியூமந்திர பீரிஸ் (சட்டம்), ஆர்.பீ.எஸ். சமன்குமாரி, ரோஹணஹப்புகஸ்வத்த, அமைதி, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே.ரத்னசிறி, அதன் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## 'நியூ டயமன்ட்' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதன்காரணமாகவே வழக்குத் தொடரப்படவுள்ளது என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து மசகு எண்ணெய் ஏற்றி வந்தபோது இலங்கையின் கிழக்கு கடற்பகுதியில் குறித்த கப்பல் தீப்பற்றலுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தந்திர சாலி ரணில்

தனி ஒரு மனிதராக நாடாளுமன்றத்துக்குள் புகுந்து தனது தந்திரோபாயத்தால் பிரதமராகி, பின் ஜனாதிபதியும் ஆகிவிட்ட ரணில் விக்கிரமசிங்க தனது அரசுக்குப் பக்கபலமாக நிற்கும் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களைத் தனது பக்கம் வளைத்துப் போடுவதில் வெற்றியும் கண்டிருக்கின்றார் என்று பொதுஜன பெரமுனவின் தலைமை திருப்தியுடன் அவதானிக்கின்றது.

வெளியில் இருந்து ஒருவரை – மூத்த அரசியல் வாதியை – இன்னொரு கட்சியின் தலைவரை – இழுத்து வந்து ஜனாதிபதியாக்குகின்றோமே அதனால் தமது கட்சியின் எம்.பிக்களுக்கும் அவருக்குமிடையில் முரணிலை ஏற்படுமோ, முறுகல் ஏற்பட்டு இணக்க நிலை பாதிக்கப்படுமோ, ஆளும் கூட்டமைப்பு மீண்டும் கொதிநிலையைச் சந்திக்க வேண்டி நேருமோ என்றெல்லாம் பின்னடிப்புச் சிந்தனையுடன்தான் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியது மொட்டுக் கட்சித் தலைமை.

ஆனால் அந்த நெருக்கடி ஏதும் ஏற்படாமல் ஒரே சமயத்தில் ஆளுங்கட்சி எம்.பிக்களையும், சர்வகட்சி அரசு அமைக்கும் முயற்சியில் எதிரணி எம்.பிக்களையும் இணக்க நிலையில் கையாளுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று மொட்டுக்கட்சித் தலைமை முழு அளவில் திருப்திப்படுவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையிலான நீண்ட இடைவெளி இப்போது பெருமளவு குறைந்து குறுகிவிட்டது என்றும், தங்கள் கருத்துக்களையும் எதிர்பார்ப்புகளையும் இலகுவாக ஜனாதிபதி வரை எட்ட வைக்க முடிகின்றது என்ற திருப்தி ஆளும் கட்சி எம்.பிக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது என்றும் மொட்டுக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கூறுகின்றார்.

"எம்.பிக்களின் பிரச்சினைகளுக்கு – கருத்துக்களுக்கு – ரணிலின் அதிகார பீடத்தினால் உடனடியாகத் தீர்வு வழங்கப்படுகின்றது என்று நான் கூறவில்லை. ஆனால் தங்கள் கருத்து ஜனாதிபதி மட்டத்தில் கூர்ந்து செவிமடுக்கப்படுகின்றது என்ற திருப்தி எம்.பிக்களுக்கு – பின்வரிசை இளம் எம்.பிக்களுக்கும் கூட – பொதுவாக ஏற்பட்டுள்ளது." – என்றார் அவர்.

கடந்த இரண்டரை வருடங்களில் இல்லாத மாற்றம் இது என்றும் அவர் சொன்னார்.

சர்ச்சைக்குரிய சர்வகட்சி அரசை ஸ்தாபிக்கும் முயற்சியையும் ஜனாதிபதி ரணில் மிகத் தந்திரமாக நகர்த்துகின்றார் என்று தெரிகின்றது.

இதுவரைகாலமும் அரசில் முக்கிய பங்குவகிப்பவர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே என்ற கற்பிதமே இருந்து வந்தது. அதுவே சர்வ கட்சி அரசு அமைப்பதற்கும் இடைஞ்சலான கருத்து நிலையாக இருந்து வருகிறது.

ஆனால் அமைச்சர்களுக்கு மேலாக, அமைச்சர்களின் நடவடிக்கைகளையும் கண்காணிக்க கூடிய அதிகாரம் கொண்ட தேசிய சபை, துறைசார் நாடாளுமன்றக் கண்காணிப்புக் குழுக்கள் போன்றவற்றையும் நிறுவ ரணில் முயலுகின்றார். அத்தகைய குழுக்களின் தலைவர்களுக்கு அமைச்சர்களுக்குரிய அந்தஸ்து நிலை வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் போன்ற எம்.பிக்களை இத்தகைய துறைசார் கண்காணிப்பு குழுக்களுக்குத் தலைவர்களாக நியமிக்கும் திட்டத்தை ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டு இருந்தார் என்பது தெரிந்ததே. இதனால் அமைச்சர் பெரியவரா, அமைச்சைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பெரியவரா என்ற சர்ச்சையில், அமைச்சர் பதவிக்கான அந்தஸ்து உயர்வு தடுமாறி, சர்வகட்சி அரசு அமைப்பது சுலபமாகும் வாய்ப்பும் ரணிலின் நகர்வால் ஏற்பட்டுள்ளது.

# யாழில் மாலையுடன் மூடப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்!

## மாவட்ட செயலர் தகவல்

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவுகளில் குழப்பங்கள்,விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுவதால் மாலை வேளையுடன் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படுகின்றன என யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழில் இயங்கும் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாலை வேளையுடன் மூடப்படுகின்றன.

இது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரம் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தேன். அதன் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாலை வேளைகளில் மது போதையில் கூடுபவர்கள்,கறுப்பு சந்தை வியாபாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதுடன்,விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகிறது.

ஆகவே தாம் மாலை வேளையுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூடுவதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் அப்பகுதி பிரதேச செயலர் ஆகியோரின் முடிவின் பிரகாரம் மாலையுடன் மூடுவதா இல்லையா என முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# கோப்பாயில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது!



யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருகோணமலையில் இருந்து வருகை தந்து நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 340 லீற்றர் (2 பரல்) கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸின் வழிகாட்டுதலின் கீழ் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான அணியினரால் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# வீட்டின் மீது வீழ்ந்த மரம் தாயும் சேயும் அருந்தப்பு!

## மட்டு. பேத்தாழையில் சம்பவம்



மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள பேத்தாழையில் தற்போது வீசி வரும் கடும் காற்றினால் வளவினுள் நின்ற மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததினால் வீட்டின் கூரைப் பகுதிகள் சேதமடைந்தமையுடன் பொருள்கள் சிலவும் சேதமுற்றுள்ளன.

நூலக வீதியில் வசித்து வரும் ந.ஜெயசக்தி என்பவரது வீடே இவ்வாறு சேதமடைந்துள்ளது. வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த குழந்தை மற்றும் குழந்தையின் தாய் ஆகியோர்கள் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

சேதமடைந்த தங்களது வீட்டின் கூரையை திருத்துவதற்கு வசதியற்ற நிலையில் அயலவர்களின் வீட்டில் தாங்கள் படுத்துறங்குகின்றோம் எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

மாவட்டத்தில் தற்போது வறட்சியுடன் கூடிய காற்று கடும் வேகத்துடன் வீசுவதனால் வாழைமரங்கள், தென்னை போன்ற பலன் தரும் மரங்கள் முறிவடைவதுடன் வீட்டின் கூரைகளும் தூக்கி வீசப்படும் சம்பவங்கள் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பரவியது புதிய வகை வைரஸ் 35 பேர் இதுவரை அடையாளம் காணல்



கொரோனா பரவலுக்கு இடையே சீனாவில் புதிய வைரஸ் தொற்று பரவி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு ஆண்டுகளை கடந்தும் கொரோனா பரவல் ஓயாத நிலையில் 75க்கும் மேற்பட்ட நாடுகளில் குரங்கு அம்மை விஸ்பரூபம் எடுத்துள்ளது. இந்நிலையில் சீனாவில் புதிய வகை வைரஸ் தொற்று பரவி வருவதை அந்நாட்டு சுகாதாரத்துறை உறுதி செய்தது. லங்யா ஹெனிபா வைரஸ் சீனாவில் பரவி வருகிறது. ஷாங்டாங், ஹெனான் ஆகிய தெற்கு மாகாணங்களில் 35 பேர் லங்யா ஹெனிபா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சீன சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கொரோனாத் தொற்றை போலவே லங்யா தொற்றுக்கும் காய்ச்சல், சோர்வு, இருமல் போன்ற அறிகுறிகள் தோன்றும் என கூறியுள்ள அதிகாரிகள்; எலி போன்ற கொறிக்கும் விலங்குகளிடம் இருந்து இந்த கிருமிகள் மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர். சீன மருத்துவ நிபுணர்கள் லங்யா வைரஸ் தொடர்பான ஆராய்ச்சிகளை தொடங்கி இருக்கிறோம் என கூறியுள்ளனர்.

## 55 ஆயிரம் கோடி ரூபாவுக்கு பங்குகளை விற்ற எலான் மஸ்க்



உலக பெரும் பணக்காரரும், டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க், டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை சமீபத்தில் கைவிட்டார். இந்த முடிவை எதிர்த்து டுவிட்டர் நிறுவனம் கோர்ட்டில் வழங்கு தொடர்ந்தது. இதனை தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதத்தில் 8.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள டெஸ்லா பங்குகளை எலான் மஸ்க் விற்றார். இதன் இந்திய மதிப்பு ரூ.67 ஆயிரம் கோடி ஆகும். இந்தநிலையில் தற்போது எலான் மஸ்க் மீண்டும் 7 பில்லியன் டொலர் பங்குகளை விற்றுள்ளார். இதன் இந்திய மதிப்பு ரூ.55ஆயிரம் கோடி ஆகும். ஒருவேளை டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால்குறைந்தவிலையில் டெஸ்லா பங்குகளை விற்க வேண்டிய சூழ்நிலையை தவிர்க்க தற்போது விற்பனை செய்தேன் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். ஓகஸ்ட் 5ம் திகதி முதல் 9ம் திகதி வரை டெஸ்லா நிறுவனத்தின் சுமார் 79 லட்சத்துக்கும் மேற்பட்ட பங்குகளைஅவர்விற்றுள்ளார்.




## கொங்கோவில் சிறைக்குள் புகுந்து கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோவில் சிறைக்குள் புகுந்து கிளர்ச்சி அமைப்பினர் கலவரத்தில் ஈடுபட்டதில் 750 கைதிகள் தப்பியோடிவிட்டனர். 5 கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். கொங்கோ நாட்டின் பிடம்போ நகரில் மத்திய சிறையில் இந்த துணிகரமான சம்பவம் அரங்கேறியுள்ளது.

இந்த சிறையில் மொத்தம் 800 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். கைதிகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றும் போது திடீரென அங்கு வந்த கூட்டு ஜனநாயக கிளர்ச்சி படையினர், துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் சிறை வளாகம் முழுவதும் கலவர பூமி போல் ஆனது. 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 750 கைதிகள் தப்பியோடிவிட்டனர். சிறையில் தற்போது 50 கைதிகள் மட்டுமே தப்பியோடாமல் உள்ளனர்.

தப்பியோடிய 750 கைதிகளை தேடும் பணியில் கொங்கோ ராணுவம் களமிறங்கியுள்ளது. சிறையில் கலவரம் ஏற்படுத்திய கூட்டு ஜனநாயக கிளர்ச்சி படையினர், மாலிகா பள்ளத்தாக்கில் இருந்து வந்தனர் என்று சிறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சிறைக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவது இது முதல்முறையல்ல. கொங்கோவின் வடக்கு சிபு மாகாணத்தில் உள்ள காங்பாயி சிறையில் கடந்த 2020ம் ஆண்டு ஒக்ரோபரில் இதேபோன்ற தாக்குதல் நடத்தப்பட்டது. தங்கள் கூட்டாளிகளை மீட்டு செல்ல முயன்ற போது 1,300 கைதிகள் தப்பியோடிவிட்டமை குறிப்பிடத்தக்கது.



## நிதி நெருக்கடியால் புலிகள் ஏலத்தில்

பாகிஸ்தானில் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதற்கட்டமாக லாகூர் அரசு பூங்காவில் உள்ள 12 புலிகள் ஏலம் விடப்பட உள்ளன என கூறப்படுகிறது.





## மிக மோசமான நகரங்கள் பட்டியலில் கராச்சி முதலிடத்தில்

உலகில் வாழ்வதற்கு மோசமான நகரங்கள் பட்டியல் குறித்து பொருளாதார புலனாய்வு பிரிவு என்ற அமைப்பு நடப்பாண்டில் நடத்திய ஆய்வு முடிவுகள் வெளியாகி உள்ளன. அந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் கராச்சி நகரம் இடம்பிடித்துள்ளது.

உள்கட்டமைப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி, கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு உள்ளிட்ட ஐந்துகாரணிகளின்அடிப்படையில் 172 நகரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மோசமான வாழ்க்கை நிலை, திருட்டு, கடத்தல், போதைப்பொருள், வன்முறை மற்றும் மோசமான சமூக மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் உலக அளவில் மிக மோசமான நகரங்கள் பட்டியலில் கராச்சி நகரம் இடம் பிடித்துள்ளது.

குறைந்து வரும் அந்நிய செலாவணி கையிருப்பு மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் ஆகியவற்றால் பாகிஸ்தான் பொருளாதார சரிவின் விளிம்பில் இருப்பதாகவும்அந்தஆய்வில்தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் வாழக்கூடிய நகரங்கள் பெரும்பாலும் ஐரோப்பாவிலும் கனடாவிலும் உள்ளன. நல்ல உள்கட்டமைப்பு மற்றும் ஸ்திரத்தன்மை வாழ்க்கையின் அடிப்படையில் உலகில் வாழ்வதற்கான முதல் 10 இடங்களின் பட்டியலில் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னா முதலிடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டிற்குள் போதைப்பொருள் நுழைவதை தடுக்க வேண்டுமென ஸ்டாலின் வலியுறுத்து

தமிழ்நாட்டிற்குள் போதைப்பொருள் நுழைவதை முழு ஆற்றலையும் பயன்படுத்தித் தடுக்க வேண்டும் என்று மாநில முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியிருக்கிறார். போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு அவர் தனது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

தமிழகத்துக்குள் போதைப்பொருள் நுழைவதை நாம் முழு ஆற்றலையும் பயன்படுத்தித் தடுத்தாக வேண்டும். போதையின் பாதையில் செல்லாமல் ஒவ்வொருவரையும் தடுக்கும் கடமை நமக்கு இருக்கிறது. போதைப்பொருள் ஆபத்து குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அரசின் முக்கிய கடமை. பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் போதைப்பொருள்களை பயன்படுத்து கிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். இதே கடமை பாடசாலை ஆசிரியர்களுக்கும் உண்டு, கல்லூரி நிர்வாகத்திற்கும் உண்டு. போதை என்னும் சமூகத் தீமையை அனைவரும் சேர்ந்துதான் தடுக்க வேண்டும். வியாபாரிகள் அனைவரும் போதைப்பொருள் விற்க மாட்டேன், என உறுதி ஏற்க வேண்டும். போதைப்பொருள் விற்பவர்களை கைதுசெய்து அவர்களின் சொத்துக்களையும் முடக்க வேண்டும். போதைப்பொருள்தான் சாதி, மத மோதல்களுக்கு தூண்டுதலாக அமைந்து விடுகிறது. போதைப்பொருள் என்பது தனி மனிதப் பிரச்சினை அல்ல, என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.



# அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு தி.மு.க. தான் பின்னனியில் உள்ளதாம்

## சசிகலா பரபரப்பு குற்றச்சாட்டு



அ.தி.மு.கவில் மிகப்பெரிய அளவில் விரிசல் ஏற்பட்டுள்ளமைக்கும் தற்போது ஓ.பி.எஸ். ஒரு பிரிவாகவும், ஈ.பி.எஸ். ஒரு பிரிவாகவும் செயல் பட்டு வருகின்றமைக்கும் தி.மு.க.தான் காரணம் என்று சசிகலா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அ.தி.மு.கவின் முதலாவது எம்.பியான மாய தேவர் காலமானதையடுத்து, அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்திய வி.கே. சசிகலா, அப்போது செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். பா.ஜ.கவின் அழுத்தம்தான் அ.தி.மு.கவின் பிளவிற்கு காரணமா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அதற்கு பதிலளித்த அவர், 40 வருடமாக அ.தி.மு.கவில் இருந்துள்ளேன். எல்லா அரசியல் சூழ்நிலைகளையும் பார்த்துள்ளேன். இதன் பின்னணியில் தி.மு.க. இருப்பதாகவே நான் கருதுகிறேன். அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு தி.மு.க. தான் காரணம். தி.மு.க. தான் பின்னால் இருந்து செயல்படுகிறது. அ.தி.மு.கவின் பிளவுக்கு மத்திய அரசு காரணமில்லை என தெரிவித்தார்.

அ.தி.மு.க. தனிப்பட்ட நபருக்கான கட்சி அல்ல என்றும், பொறுத்திருந்து பாருங்கள் அனைவரையும் ஒன்றிணைப்பேன் எனவும், அ.தி.மு.கவை கைப்பற்றுவதுடன் இரட்டை இலை சின்னத்தையும் மீட்பேன் என்றும் சசிகலா உறுதிபடக் கூறியிருந்தார்.

# மீண்டும் பிரியங்கா காந்திக்கு கொரோனாத் தொற்று உறுதி



காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்திக்கு மீண்டும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த ஜூன் மாதம் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு தொற்று உறுதி செய்யப்பட்டபோது, சோனியா காந்தியின் மகளான பிரியங்கா காந்திக்கு லேசான அறிகுறியுடன் கொரோனா கண்டறியப்பட்டது. தற்போது மீண்டும் அவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பிரியங்கா காந்தி தனது டுவிட்டர் பதிவில் உறுதிப்படுத்தியிருக்கிறார். மீண்டும் எனக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி வீட்டில் தனிமைப்படுத்தி கொண்டுள்ளேன். நீங்களும் அவதானத்தோடு இருங்கள், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை விமான நிலையத்தில் பயணிகளிடம் சட்டவிரோத வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல்




சென்னை விமான நிலையத்தில் 21 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து இலங்கையின் கொழும்புக்கு புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த பயணிகள் விமானத்தில் செல்வதற்காக வந்த பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகள் கண்காணித்த போது இரு பயணிகளை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்துள்ளனர். அதிகாரிகளிடம் அவர்கள் இருவரும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசியதால் அவர்களது உடைமைகளைச் சோதனை செயதுள்ளனர்.

அவற்றில் எதுவும் இல்லாததால் இருவரையும் தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அதில் அவர்கள் இருவரும் உள்ளாடைகளுக்குள் கட்டுக்கட்டாக அமெரிக்க டொலர்களை மறைத்து வைத்துக் கடத்திச்செல்ல முயன்றதைக் கண்டுபிடித்துள்ளனர். அவர்களிடம் இருந்து 20 லட்சத்து 89 ஆயிரம் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்களைப் பறிமுதல் செய்த சுங்க இலாகா அதிகாரிகள், இருவரிடமும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



# ராகுல் காந்திக்கு உடல்நலக் குறைவு ராஜஸ்தான் பயணம் ரத்தானது

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி, கட்சியின் நேத்ராத்வ சங்கல்ப சிவிர் கூட்டத்தில் கலந்து கொள்ள ராஜஸ்தானின் ஆல்வார் நகருக்கு பணயம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், தனது ராஜஸ்தான் பயணத்தை அவர் ரத்துச் செய்துள்ளார்

ராகுல் காந்தியின் சகோதரியும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான பிரியங்கா காந்திக்கு கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, ராகுல் காந்தியும் தனது பயணத்தை ரத்துச் செய்துள்ளமையால் அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதனை மேற்கொண்டிருக்கலாம் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையம் ஐம்பது ஏக்கரில் கிரான்குளத்தில் திறப்பு

## ஸ்ரீ சத்யசாய்பாபா பவுண்டேஷன் உதவியில்

(பைல் இஸ்மாயில்)

நாட்டில் இருதய நோயினால் பாதிப்புக்குள்ளாகும் சிறார்களின் இருதய நோய்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் பாரிய சிகிச்சை நிலையமொன்று மட்டக்களப்பு, கிரான்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் ஸ்ரீ சத்யசாய்பாபா பவுண்டேஷன், இலங்கை அரசின் சுகாதார அமைச்சுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கமைய சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரியின் முன்னெடுப்பில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த சத்திர சிகிச்சைக் கூடத்தை பகவான் சத்யசாய் பாபாவின் சீடர் சுவாமி சத்குரு ஸ்ரீ மதுசுதன்சாய் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இலங்கையில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பிறப்பிலேயே இருதய நோய்க்குள்ளாகின்றனர். இதில் சுமார் 1,500 பேருக்கு மாத்திரமே தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சிறுவர் சத்திர சிகிச்சை நிலையம் அமைந்துள்ள கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையில் இச்சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அதனால் 1,500 பேர் காத்திருப்போர் பட்டியலில் இருந்து வருகின்றனர்.

இக்குறைபாட்டைத் தீர்த்து வைக்கும் வகையிலேயே ஸ்ரீ சத்ய சாய்பாபா சரணாலயத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு, கிரான் குளத்தில் இந்த சத்திர சிகிச்சை கூடம் செயற்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர, கிழக்கு மாகாணத்தில் சிறுநீரக நோய்க்குள்ளாவோர்களின் வசதி கருதி இவ்வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் சிறுநீரக நோயாளிகளுக்கு இரத்த சுத்திகரிப்பு வசதி செய்வதற்கும் இங்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் வைத்தியர் விஜேசூரிய, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகுணன், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் இரா.முரளிஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர். வீ.கனகசிங்கம் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# கைப்பணிப்பொருள்களின் கண்காட்சி தம்பலகாமத்தில்

ஹஸ்பர்)

தையல் பயிற்சி நெறி மாணவர்களின் தயாரிப்புகளின் கண்காட்சி கிழக்கு மாகாணக் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் தம்பலகாமத்தில் புதுக்குடியிருப்பு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்கண்காட்சி நிகழ்வில் தையல் பயிற்சி மாணவிகளினால் தயாரிக்கப்பட்ட கைப்பணி பொருள்கள், ஆடை உற்பத்தி எனப் பலவும் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் என்.தனஞ்செயன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பத்மராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.பர்ஹானா, குச்சவெளி பிரதேச செயலகப் பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.செந்தூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாளை கதிர்காமத்தில் தீர்த்தம் காட்டுப் பாதையும் மூடப்பட்டது

## சுமார் 30 ஆயிரம் பக்தர்கள் யாத்திரை





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்திற்கான தீர்த்தம் நாளை 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

அதை ஒட்டிய இறுதி மகா பெரஹரா இன்று வியாழக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெற இருக்கிறது.

கடந்தமாதம்29ஆம்திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த 15 நாள்களாக திருவிழா, பெரஹர ஊர்வலம் நடைபெற்றுவந்தது.

இதேவேளை, கதிர்காம காட்டுப்பாதை மூடப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்பட்டது. இம்முறை 29 ஆயிரத்து 694 பேர் காட்டுப் பாதையால் பயணித்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் பல சோதனைகளையும் துன்பங்களையும் சந்தித்து அவர்கள் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களது யாத்திரை என்றுமில்லாதவாறு இம்முறை பலத்த சோதனைகளை ஏற்படுத்தி இருந்தது.

அவர்கள் பயணித்த பாதை, ஆற்றைக் கடக்கும் சிரமம் , மழை மற்றும் கால நிலையால் அவர்கள் பட்டபாடு போன்றவற்றை இப் படங்கள் சித்திரிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போராட்டக்காரர்களை துன்புறுத்துவது மன்னிக்க முடியாத பாரிய குற்றமாகும்!

## கரு ஜயசூரிய காட்டம்



அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைப் பாராட்டியுள்ள சமூக நீதிக்கான தேசிய இயக்கம், அது ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்வது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு என்று கூறியுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை புதுப்பிப்பதற்கு எடுக்கப்பட்ட சாதகமான நடவடிக்கையாக இதனைக் கருதுவதாக அந்த இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

முந்தைய வரைவில் உள்ளடங்கிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் பல முக்கிய அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சிகளை இல்லாதொழிக்க ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற வகையில், இதுபோன்ற ஜனநாயக சீர்திருத்தங்களுக்காக குரல் கொடுத்த ஜனாதிபதி, நீதி அமைச்சர் உட்பட்டவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவிக்கிறேன் எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால சந்ததியினர் வாழும் நாட்டை உருவாக்குவதே இந்நாட்டு மக்கள் பிரதிநிதிகளின் தலையாய பொறுப்பு. எனவே ஜனநாயகம் மற்றும் மக்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதன் மூலம் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப்பொறுப்பைநிறைவேற்றும்வகையில், மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். இதனால் தான் கடந்த அரசாங்கம் கொண்டு வந்த 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராகப் போராடி, அதை திரும்பப் பெறப் போராட வேண்டியிருந்தது.

எந்தச் சூழலிலும் ஜனநாயகத்துக்காகப் பெரும் தியாகங்களைச் செய்த தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் அமைதிப் போராட்டத்தின் செயல்பாட்டாளர்களைத் துன்புறுத்துவதை மன்னிக்க முடியாது.

இத்தகைய நிகழ்வுகள் நாட்டில் தேசிய மற்றும் சர்வதேசஅளவில்எதிர்மறையானவிளைவுகளை ஏற்படுத்துகின்றன.

எனவே இந்த விடயங்களில் ஜனாதிபதி தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# பொதுப் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்!



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில், பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்ஸை சந்தித்துள்ளார்.

இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவதை அமெரிக்கா விரும்புகிறது என்று தூதுவர் சங், டிரான் அலஸிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியைப் பெறுவதில் இலங்கைக்கு அமெரிக்காவின் ஆதரவையும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன் போது இலங்கை பொலிஸாரின் பணிகள் மற்றும் நாட்டில் நிலவும் பொதுமக்கள் எதிர்ப்புகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

ஓகஸ்ட் 9 ஆம் திகதி எந்த ஒரு பேரழிவு சம்பவமும் நடைபெறவில்லை என்பதில் தான் மகிழ்ச்சி அடைகிறேன் என தூதுவர் சுங் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

# விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் வடக்கில் சுகவீன விடுமுறைப் போராட்டம்

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எதிராக அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடகங்களுக்கு செய்தி வழங்கியமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்று (புதன்கிழமை) அடையாள கவனவீர்ப்பு சுகவீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக வடமாகாண விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வருகை குறைவாக காணப்பட்டதுடன், அலுவலக செயற்பாடுகள் முடங்கின.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மேற்படி விடயம் தொடர்பாக அண்மையில் பத்திரிகைகளில் மாகாண விவசாயத் திணைக்களம் சார்பாகவும், மாகாண விவசாயப் பணிப்பாளர் தொடர்பாகவும் தங்களால் வெளியிடப்பட்ட செய்தியில் மாகாண விவசாயத் திணைக்களத்தின் மீது விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் ஆளணி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் உயர்பதவியான மாகாணப் பணிப்பாளர் பதவி இலங்கை விவசாய சேவையின் தரம் 1 இற்கு உரித்துடையது என்பதுடன் அதற்கு உயர்வான இலங்கை விவசாய சேவையின் விசேட தரத்தில் ஆளணிகள் எவையும் உருவாக்கப்படவில்லை.

இதன் விளைவாகவே இவருக்கான பதவியுயர்வு வழங்கப்படவில்லை என்பது எமது அறிவுக்கு எட்டியவரை உண்மையாகும்.

வடக்கு மாகாணத்தில் இலங்கை விவசாய சேவையின் விசேட தரத்துக்கான ஆளணி உருவாக்கல் எவையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் நாமறிந்த வரையில் எமது விவசாயப் பணிப்பாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு அவரால் நிராகரிக்கப்பட்டோ அல்லது பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையோ காணப்படவில்லை. இந்நிலையில் அவருக்குரிய பதவியானது மீளப்பெறப்பட்டதானது அரச உத்தியோகத்தர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி அவமதிப்பதாகவே அரச உத்தியோகத்தர்களான நாம் மிகவும் மனவேதனை அடைகின்றோம்.

மேலும் தங்களால் வழங்கப்பட்ட மேற்படி செய்தியில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் பல ஆண்டுகாலமாக இந்தப் பதவியில் உள்ளார் எனவும், வேறு மாகாணங்களில் இந்த நடைமுறை அவதானிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் ஏனைய மாகாணங்களின் விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்களாக நீண்டகாலமாக இருந்தமையும் – இருக்கின்றமையும் பலரும் அறிந்த விடயமே.

எமது மாகாணத்துக்கு மட்டும் இந்நடைமுறை பின்பற்றுவதும், எமது மாகாண பணிப்பாளருக்குரிய இடமாற்றமோ பதவியுயர்வோ வழங்கப்படாததும் அவரின் குற்றமன்று என நாம் கருதுகின்றோம்.

மேற்படி உத்தியோகத்தருக்கு உரித்தான பதவியுயர்வையோ பதவிக்கான நியமனத்தையோ வழங்காது பதவி மீளப்பெறலானது அநீதியான செயற்பாடு என நாம் கருதுகின்றோம்.

மேலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய திணைக்களங்களிலும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் அதிக காலம் துறைசார் பதவிகளில் பதவி வகிப்பதையும் நாமறிந்துள்ளோம்.

எனவே எமது மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு ஏற்பட்ட அபகீர்த்தியைத் துடைத்து அவரால் வழங்கப்பட்ட அர்ப்பணிப்பான மற்றும் புனிதமான சேவையை மதித்து அவருக்குரிய, நீதியை வழங்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம். இதற்கு அடையாளமாக எம்மால் எமது வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் சார்பாக கவனவீர்ப்பு சுகவீன விடுமுறையை மேற்கொள்ளகின்றோம் என்பதைத் தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றோம். – என்றுள்ளது.

# ஓட்டமாவடி மீராவோடையில் பூத்துக் காய்க்கும் பேரீச்சை





மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை பிரதேசத்தில் தனியார் ஒருவரின் வளவினுள் பேரீச்சை மரங்கள் காய்த்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பிரதான வீதியில் நடப்பட்டுள்ள பேரீச்சை மரங்கள் பூத்தும் காய்த்தும் இருப்பதை ஒவ்வொரு வருடமும் பார்த்து வருகின்றோம்.

இம்முறை மீராவோடை 04, ஹாஜியார் வீதியிலுள்ள வி.ரி.எம். இர்ஷாத் என்பவரின் வீட்டில் நடப்பட்ட பேரீச்சைமரம் எட்டு வருடம் பராமரித்து வந்த நிலையில் மூன்றாவது வருடத்தில் காய்க்க தொடங்கி, இம்முறை அதிகமாக பேரீச்சை காய்களைத் தந்துள்ளது. இந்தப் பேரீச்சையின் விதைகள் அற்ற நிலையில் சிறியதாக காய்த்து தொங்குவதை அவதானிக்க முடிகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் அதிலும் விசேடமாக சவுதி அரேபியாவில் இருந்து தான் கூடுதலான பேரீச்சை மரங்கள் காய்த்து உலகிற்கெல்லாம் பேரீச்சம் பழங்கள் கிடைக்கின்றன. இப்போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் பேரீச்சம் பழங்கள் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2022இல் வெளியிடப்பெற்றது.